செய்தி வெளியீடு எண்: 990 நாள்:22.12.2020

## பத்திரிகைச் செய்தி

இந்திய ஹஜ் குழுவானது, புனித ஹஜ் பயணிகள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்கும் கடைசி தேதியினை 10–01–2021 வரை நீட்டித்துள்ளது. இதனைத் தொடர்ந்து புனிதப் பயணிகள் 10–01–2021 அன்று அல்லது அதற்கு முன்னர் வழங்கப்பட்டு குறைந்தது 10.1.2022 வரையில் செல்லத்தக்க இயந்திரம் மூலம் படிக்கத்தக்க பாஸ்போர்டின் முதல் மற்றும் கடைசி பக்கம், வெள்ளை பின்னனியுடன் கூடிய சமீபத்திய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், உறைத் தலைவரின் இரத்து செய்யப்பட்ட காசோலை நகல் மற்றும் முகவரிச் சான்றின் நகல் ஆகியவற்றை பதிவேற்றம் செய்ய வேண்டும். தற்போது ஹஜ் 2021–ல் கொச்சின் புறப்பாட்டு தளத்திலிருந்து அஸிஸியா தங்குமிட வகைக்கு ஏறத்தாழ ரூ.3,56,433.40 செலவினமாகும் என மும்பை, இந்திய ஹஜ் குழு தெரிவித்துள்ளது. கூடுதல் விவரங்கள் அறிய விண்ணப்பதாரர்கள் இந்திய ஹஜ் குழு இணையதள முகவரி (www.hajcommittee.gov.in.)–ஐ தொடர்பு கொள்ளலாம்.

முதன்மைச் செயலாளர்
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9